# கல்வி சார் நிறுவனங்களில் பார்ப்போரின் பங்கு

(மட்டக்களப்பு பாரம்பரிய அரங்கினை மையமாகக் கொண்ட ஆய்வு)

Karalasingam Atputhan, Reseach Scholar, Batticaloa, Srilanka

**ஆய்வுச்சுருக்கம் :-**

*இவ்வாய்வானது மட்டக்களப்பு மாவட்ட பாரம்பரிய தமிழ் அரங்குகளில் ஒன்றான வடமோடி தென்மோடி கூத்துக்களில் இன்றைய பார்வையாளர்களின் பங்கு கல்விசார் நிறுவனங்களில் எவ்வாறு காணப்படுகின்றது என்பதனை ஆய்வு செய்வதாக அமைகின்றது.*

*பாரம்பரிய அரங்குகள் கல்விசார் நிறுவனங்களில் குறிப்பாக பல்கலைக்கழகங்கள் மற்றும் பாடசாலைகளில் பாடத்திட்டமாக அறிமுகப்படுத்தப்பட்ட பின்னர் அங்கும் தனக்கென பார்வையாளர்களையும், பங்காளர்களையும் இவ்வரங்கு கொண்டுள்ளது. இப்பார்வையாளர்களின் பங்கு தற்கால பாரம்பரிய அரங்கில் எவ்வாறான தாக்கத்தினை ஏற்படுத்துகின்றது என்பதனை ஆய்வு செய்வது இவ்வாய்வின் முக்கிய நோக்கமாக அமைகின்றது.*

*நவீனகாலத்தின் தாக்கம் பாரம்பரிய அரங்கில் செல்வாக்குச் செலுத்தினாலும் இவ்வரங்கானது தனக்கான தன்மையினையும் தனித்துவத்தினையும், பண்பினையும் இன்றைய சூழ்நிலையிலும் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாரம்பரிய அரங்குகள் பல்வேறுபட்ட வகைகளில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற இன்றைய சூழ்நிலையில் பார்ப்போரின் (spectator) பங்கினை ஆராய்வது மிக முக்கியமானதாகவே காணப்படுகின்றது. இவ்வாய்வானது இரண்டு முறைகளில் தரவு சேகரிக்கப்படுகின்றது. ஆய்வு முறையில் முதல் நிலைத் தரவாக ஆய்வாளரினுடைய நேரடிப்பார்வை, பங்குபற்றல், நேர்காணல் என்பன அமைகின்றன. இரண்டாம் நிலைத்தரவாக பத்திரிகைகள், சஞ்சிகைகள், புத்தகங்கள், இணையங்கள் போன்றன பயன்படுத்தப்படுகின்றன.*

**திறவுச் சொற்கள்:-**

*வடமோடி, தென்மோடி, பார்ப்போர். பல்கலைக்கழகம், பாடசாலை.*

**அறிமுகம் :-**

தமிழர்களின் அடையாளமாகக் காணப்படும் பாரம்பரிய கலை வடிவமான கூத்து இன்று மட்டக்களப்பில் பல கிராமங்களில் ஆடப்படுவதோடு பல்வேறு விடயங்களையும் தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது. பண்பாட்டின் சின்னமாக விளங்குகின்ற இக்கலைவடிவமானது சமூகத்தோடு ஒன்றியதாகவும் திகழ்கின்றது. நன்மை, தீமை, அதர்மம், தர்மம், நீதி, நேர்மை போன்ற அறிவுரைகளையும் வழங்குகின்ற இதனை வெறுமனமே இரசித்துவிட்டுப் போகும் கலைவடிவமாக் கொள்ளமுடியாது. இது ஒரு பரந்துபட்ட அம்சங்களைக் கொண்டதாகக் காணப்படுகின்றது. இதற்கு ஆதாரமாக இன்றைய நிலையில் இடம்பெறும் ஆற்றுகைகள், ஆய்வுகள் இதற்கு சான்று பகர்கின்றது. சமூகமே இதன் பார்போராக இருந்த நிலையிலிருந்து கூத்தினைச் செய்யும் அச் சமூகத்தோடு ஏனைய கல்விச் சமூகம், பாடசாலை சமூகம், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், மாணவர்கள், அரச, அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள், ஆய்வாளர்கள் என பலர் பார்ப்போராக காணப்படுகின்றமை இக்காலத்துக்குரிய சிறப்பம்சமாகும்.

இக்கூத்துக் கலைவடிவமானது இன்று கிராமங்களில் சிறப்புற்றிருப்பினும் இதனை மென்மேலும் அடையாளப்படுத்துவதும், பேணிப்பாதுகாப்பதும் அவசியம் எனும் அடிப்படையில் பல்வேறு பரிணாமங்களுக்கூடாகவும் வளர்சியடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகங்கள், பாடசாலைள் போன்றவற்றினூடாக கூத்தரங்கச் செயற்பாடுகளை மேற்கொள்ளும்போது அதனை ஏனைய சமூகம், இனம், வெளி நாட்டவர் என அனைவரும் அறிவதற்கான வாய்ப்பு ஏற்படுகின்றது.

பாரம்பரியத்தோடு ஆற்றுகை செய்யப்படும் கூத்தின் இயங்கு தளங்கள் பல வகையாக தற்காலத்தில் காணப்படுகின்றது. அதன் பங்குதாரர்களாக விவசாயிகள், ஏனைய சிறு தொழில் செய்வோர், அரச மற்றும் அரச சார்பற்ற உத்தியோகத்தர்கள் பெரியோர் சிறுவர்கள் இளைஞர்கள் எனப் பலர் உள்ளடங்குகின்றனர். அதேபோன்று பல்கலைக்கழக மட்டத்தில் விரிவுரையாளர்கள், மாணவர்கள் ஆய்வாளர்கள் அதில் பங்குதாரர்களாகவும், பார்ப்போராகவும் இயங்குகின்றனர். பாடசாலைகளில் மாணவர்களும், ஆசிரியர்களும் பெற்றோரும்

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2024, IRJTSR 

பங்குதாரர்களாகவும் பார்வையாளர்களாகவும் இருக்கின்றனர். அதுமாத்திரமின்றி பொது அமைப்புக்கள், அரச நிறுவனங்கள் இதன் அரங்கச் செயற்பாட்டில் ஈடுபடும்போது அதில் பணிபுரியும் உத்தியோகத்தர்களும் பார்போராகக் கருதப்படுகின்றனர். ஆகவே இங்கும் பார்ப்போர் முக்கியப்படுத்தப்பட வேண்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. எந்தவொரு நவீன நாடகமும் தனி ஒருவராலோ அல்லது நிறுவனத்தாலோ தயாரித்து ஆற்றுகைப்படுத்த முடியும். ஆனால் பாரம்பரிய கூத்துக் கலைவடிவமானது சமூகம் ஒன்று இணையும்போதுதான் அதனைச் சிறப்பாக ஆற்றுகை செய்யக்கூடியதாக இருக்கும். தனியாற்றுகை மட்டும் கூத்தல்ல. அதனுடைய ஆரம்பச்செயற்பாடு தொடக்கம் வீடுவீடாகச் சென்று ஆடுதல் வரை பார்வையாளர்களையும் தன்னகத்தே கொண்டு விளங்கும் கலையே கூத்துக்கலையாகும். இவ்வாறான சிறப்பம்சங்களைக் கொண்ட கூத்துக் கலையின் பரிணாமங்களையும் அக்கலையினுடைய பார்வையாளர்களையும் ஆராய்வது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

### பல்கலைக்கழக கூத்தரங்கச் செயற்பாடுகளில் பார்ப்போர்

சமூகத்திற்கும் கலைவடிவங்களுக்குமிடையே பாரிய தொடர்புண்டு. ஒரு குறிப்பிட்ட சமூகத்தினுடைய அரசியல் பொருளாதார கலாச்சார விருத்தி அந்தச் சமூகத்தின் முக்கியமான கலைவடிவங்களிலும் பிரதிபலிக்கின்றது. பாரம்பரிய கூத்துக்கலை வடிவமானது வளர்ச்சியடைந்த நிலையில் நிலமானிய அமைப்பினைப் பிரதிபலிப்பதுடன் அதனைக் கட்டிக்காக்க உள்ளடக்க உருவங்களையும் பெற்றுள்ளதுடன் சமூகத்தின் உளவியல் தேவைகளையும் நிறைவேற்றுகின்றது. பொருளாதாரமானது சூழலைத் தீர்மானிக்கின்றது. இச்சூழல் மாறும்போது அதன் முக்கியத்துவத்தினை இழக்கின்றது. புதிய பண்பாட்டினுடைய வருகை நம்பிக்கை என்பன மாற்றத்தை ஏற்படுத்தக் காரணங்களாக அமைகின்றன. ஆனால் சூழல் மாறினாலும் பாரம்பரிய நம்பிக்கை காரணமாகவும் அதன்மேற் கொண்ட பற்று, ஈடுபாடு காரணமாகவும் கூத்து போற்றப்படுகின்றது. மாறும் சமூகத்திற்கேற்ப அதனைமாற்றி சமூகப் பயன்பாடுடையதாக ஆக்கும் முயற்சிகளும் புத்திஜீவிகளால் மேற்கொள்ளப்படுகின்றன.

பல்கலைக்கழகத்தினுள் கூத்துச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதற்கு ஈழத்தில் தமிழர் மத்தியில் காரணகர்த்தாவாக இருந்தவர் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களாவார். 1960இல் இவருடைய செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. அந்தவகையில் பாரம்பரிய கூத்தினை கிராமியப் பாணியிலேயே தயாரித்தார். ஆனாலும் பல மாற்றங்களைக் கொண்டு வந்தார். இது பார்ப்போரிலும் தாக்கத்தைச் செலுத்தியது. கிராமிய கூத்தில் பார்ப்போர் கிராம மக்களாகவே காணப்பட்டனர். இவர்கள் பாய் தலையனை சகிதம் வருகைதந்து பார்த்து தூங்கி மகிழ்ந்து செல்வர். இங்கு உடை, ஒப்பனை, ஆபரணம், முடி அனைத்துமே தனித்துவமாக் காணப்படும். பல்கலைக்கழக பார்ப்போர் அதிலிருந்து சற்று மாறுபட்டவர்களாகவே காணப்பட்டனர்.

கிராமிய கூத்துப் பாணியிலேயே பேராசிரியர் கூத்துக்களைத் தயாரித்துள்ளார். ஆனால் அவர்தன் தயாரிப்பில் பல மாற்றங்களைச் செய்தார். பாமர மக்கள் ஆடிய கூத்தினை படித்துக்கொண்டிருக்கின்ற மாணாக்கரைக் கொண்டு தயாரித்தமையால் கற்றோர் மத்தியில் ஓர் அங்கீகாரம் பெற்ற ஒரு கலையாகவும் மாறியது. முதன்முதலாக பெண் பாத்திரங்களுக்கு பெண்களையே நடிக்க வைத்த பெருமையும் இவரையே சாரும். விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்களை ஒன்றரை மணி நேரமாகச் சுருக்கியதும், வட்ட மேடையில் ஆடப்பட்ட கூத்துக்களை அனைவருக்கும் இன்று பழகிப்போன படச்சட்ட மேடைக்குள் கொண்டு வந்ததும், கிராமிய பார்ப்போர் மாத்திரமின்றி படித்த மத்திய வர்க்கப் பார்ப்போரையும் மனதிற்கொண்டு இந் ஆற்றுகைகளைத் தயாரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்க சிறப்பம்சங்கள் எனலாம்.

இங்கு படித்தவர்கள், மத்தியதர வர்க்கத்தினர் பார்ப்போராக மாற்றப்பட்டமையினைக் காண முடியும். இவர்கள் நவீன நாடகங்களைப் பார்பதைப் போல கூத்தினைப் பார்க்கின்ற நிலை உருவாகியமை குறிப்பிடத்தக்கது. இங்கு கூத்தில் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களால் மாற்றப்பட்ட அனைத்த அம்சங்களும் மத்தியதர வர்க்கத்தினரை மையமாக வைத்தே மாற்றப்பட்டது. இங்கு பார்போர் இவர்களாகக் காணப்பட்டமையே ஆகும். இவருக்குப் பின்னால் கூத்து மரபின் வளர்ச்சிப் போக்கினை இலகுவாக விளங்கிக்கொள்ளும் பொருட்டு 5 பிரிவுகளாக நோக்கலாம்.

1. "வித்தியானந்தன் ஆரம்பித்து வைத்த அதே மரபில் கூத்துமரபு வளர்ந்து சென்றமை.
2. வித்தியானந்தன் அதே மரபிற்குள் புதிய உள்ளடக்கத்தைப் புகுத்தியமை.
3. புதிய கருத்தக்களைப் புகுத்திய அதேவேளை, அதன் அமைப்பிலும் மாற்றங்களை ஏற்படுத்தியமை.
4. கூத்து மரபினை பரதத்துடன் இணைத்து புதிய நாட்டிய நாடகங்களை உருவாக்கியமை.
5. கூத்து மரபின் சில அம்சங்களை எடுத்து நாடகத்திற்கு உபயோகப்படுத்தியமை". ( மௌனகுரு. சி 2005.139)

பேராசிரியர் பல்கலைக்கழக மாணாக்கரைக் கொண்டு நான்கு கூத்துக்களைத் தயாரித்தார். அவையாவன கர்ணன்போர் (1985), நொண்டி நாடகம் (1963), இராவணேசன் (1964), வாலிவதை (1985). இவற்றுல் நொண்டி

நாடகம் தென்மோடி கூத்து வகையைச் சர்ந்தது. ஏனையவை வடமோடிக் கூத்து வகையைச் சார்ந்தன. விடிய விடிய ஆடப்பட்ட கூத்துக்களை ஒன்றரை மணி நேரமாகச் சுருக்கியதும், வட்ட மேடையில் ஆடப்பட்ட கூத்துக்களை படச்சட்ட மேடைக்கு கொண்டு வந்ததும், கிராமியப் பார்வையாளர்களுக்கல்லாமல் படித்த மத்தியதர வர்க்கப் பார்வையாளரை மனதிற்கொண்டு இந்நாடகங்களைத் தயாரித்ததும் கவனத்திற்கொள்ள வேண்டிய அம்சங்களாகும். ஏனெனில் இவை இவரின் கூத்துத் தயாரிப்பினை நிர்ணயித்த முக்கியமான மூன்று காரணங்களாகும். கிராமியக் கூத்தினின்றும் இவரது கூத்துக்கள் வேறுபட்டு நிற்பதற்கான அடிப்படைகளும் இவைகள்தான்.

பேராசிரியர்.சு.வித்தியானந்தன் தயாரித்த கர்ணன்போர், நொண்டி நாடகம் இரண்டும் பாரம்பரியமாக விடிய விடிய ஆடப்பட்ட கூத்துகளாகும். அனாவசியமான பாத்திரங்கள், கதை ஓட்டத்திற்கு அவசியம் இல்லாத பாடல்கள், ஒன்றுக்கு மேற்பட்ட காப்பு விருத்தங்கள் என்பவற்றை நீக்கி பழைய பிரதியை ஒன்றரை மணி நேரத்திற்கு நிகழ்த்தக்கூடிய கூத்துப்பிரதியாக்கியமை ஒரு முக்கிய அம்சம். இதை அவர் தமது மாணாக்கரின் உதவியைக்கொண்டு செய்து முடித்தார்.

“நேரச் சுருக்கத்திற்கும் நாடகச் செம்மைக்கும் நான் முன்னரே குறிப்பிட்ட மத்தியதர வர்க்கப் பார்வையாளருக்கும் தொடர்புண்டு. இவர்கள் பாரம்பரிய கூத்துக்களைப் பார்த்துக் கொண்டே விடிய விடிய பார்க்கும் கிராமிய மக்களைப் போன்றோர் அல்லர். இப்பார்வையாளர்கள் விடியவிடிய அமர்ந்து நாடகம் பார்க்கும் பின்னணி இல்லாதவர்கள். இவர்கள் அடுத்த நாள் அதிக அலுவல்கள் உள்ளவர்கள். அன்றியும் பல்வேறு நாடகம் பார்த்து, படித்து இரசனை கூடியவர்கள். இதிகாச புராணங்களை கல்வி மூலம் கற்றவர்கள், விமர்சனப் பாங்கு உடையவர்கள். கூத்தை ,கிராமிய மக்களைப்போல் அன்றி புறவலமாக நின்று பார்ப்பவர்கள்’’. (மௌனகுரு.சி , 2005, 127-131) எனவே இப் பார்வையாளர்களுக்குத் தக்க நேரச்சுருக்கமும், செம்மைப்படுத்தலும் இன்றியமையாததாயின. இச்செம்மைப்படுத்தலின் அதியுயர் நிலையினை பேராசிரியர் அரங்கிற்கென அவைக்காற்றிய முறையில் காணலாம்.

இதனைவிட படச்சட்ட மேடைக்குள் கூத்தினைக் கொணர்ந்தமையால் ஆட்ட முறைகளில் சில மாற்றங்களை ஏற்படுத்தவேண்டியிருந்தது. நாலுபக்கப் பார்வையாளரையும் பார்த்தபடி ஆடும் முறைக்கு அதிக முக்கியத்துவமளிக்கப்படவில்லை. முன்னால் இருக்கும் ஒருபக்கப் பார்வையாளரை நேராகப் பார்த்தபடி ஆடும் முறைக்கே அதிக அழுத்தம் கொடுக்கப்பட்டது. “இதனால் சுற்றி ஆடுதலுக்குப் பதில் ஒரு நேர்கோட்டில் ஆடும் ஆட்டமுறை புகுத்தப்பட்டது. சபையோருக்கு நடிகர் பின்பக்கம் காட்டக்கூடாது என்ற ஒருவகைக் கோட்பாட்டை மனங்கொண்டு சில ஆட்டமுறைகள் நீக்கப்பட்டன. இவையாவும் நேரச்சுருக்கம், படச்சட்ட மேடை என்ற வரையறைகளினால் தீர்மாணிக்கப்பட்டன என்பது மனங்கொள்ளத்தக்கது’’. ( மௌனகுரு.சி , 2005, 127-131)

பேரசிரியர்.சு.வித்தியானந்தன் பல்கலைக்கழக கூத்துச் செயற்பாட்டிற்கு உதவி புரிந்தமை குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பல்கலைக்கழகத்தில் கூத்து செயற்பாடு முன்னெடுக்கப்பட்டு வந்த நிலையில் பேராசிரியர்.சி.மௌனகுரு போன்றோர் பல்கலைக்கழகத்தில் கூத்துச் செயற்பாடுகளை மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. பேராசிரியர்.சு.வித்தியானந்தன் செம்மைப்படுத்தல், புத்துருவாக்கம் என்ற நோக்கில் கூத்துக்களை சுருக்கி பாடல்களில் மாற்றங்களைக் கொண்டுவந்து புதுவிதமாகப் பார்ப்போருக்கு கூத்தினை பல்கலைக்கழகத்தில் வழங்கினார். தொடர்ந்து அதனை முன்னெடுத்தவர்களுள் பேராசிரியர்.சி.மௌனகுருவிற்கும் முக்கிய இடமுண்டு. இவரும் படச்சட்ட மேடையில் கூத்தரங்கச் செயற்பாட்டினை முன்னெடுத்துச் சென்றமையும் குறிப்பிடத்தக்கது.

பேராசிரியர்.சி.மௌனகுரு அவர்கள் யாழ்ப்பாணம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் நுண்கலைத்துறையில் முதல் நிலை விரிவுரையாளராகவும், பொறுப்புத் துணை வேந்தராகவும் கடமையாற்றினார். அதன் பின்னர் கலைப்புலத் தலைவராகவும் தொடர்ந்து பணியாற்றி ஓய்வு பெற்றவர். ஈழத்தில் தமிழர் வாழும் பிரதேசங்களுக்கெல்லாம் பயணம் மேற்கொண்டு, அவர்களுள் ஒருவராக வாழ்ந்து, அருகி வந்த அப்பிரதேசக் கூத்துக்களை மீண்டும் ஆடும்படி கிராம மக்களுக்கும், பாடசாலை மற்றும் பல்கலைக்கழக மாணவர்களுக்கும் உற்சாகமளித்ததுடன், முறையான பயிற்சியுமளித்து அக்கலைக்கு கற்றோர் மட்டத்திலும், அரச மட்டத்திலும் ஆதரவு பெற்றுத்தந்தவர். “பழைய கூத்து ஏடுகளை புதுப்பித்து பதிப்பித்தவர், பிரதேச மட்டத்தில் அறியப்பட்ட வடமோடி நாடகக் கலையை தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் அறிமுகம் செய்தவர், தமிழரின் நாடக மூலவேர்களைத் தமிழர்களுக்கு உணர்த்தியவர’’ (நூலக நிறுவனம், 2013, 41). பல்கலைக்கழகத்தில் இருந்து கூத்துப்பற்றி ஆய்வு செய்த முக்கியமானவர் பேராசிரியர்.சி.பௌனகுரு. கூத்தோடு ஒன்றிப்பிணைந்த அவர் பிற்பட்ட காலங்களிலும் பல்கலைக்கழகத்தில் இராவணேசன் போன்றவற்றை கூத்துகளில் அவர் பெற்ற அறிவும் தெளிவுமே காரணமாக அமைந்தது எனலாம்.

சமகாலத்தில் மீளுருவாக்கச் சிந்தனைகள் மேலெழும்புவதைக் காண முடியும். இப்பணியில் முழுச்சமூகங்கள் சார்ந்தும் ''பாரம்பரிய அரங்கான கூத்தின் வடிவம் உள்ளடக்கம் என்பற்றினை கணக்கில் எடுத்து இயங்கும் அண்ணாவிமாரின் புதிய பரிணாமமும் கூத்து சமுதாயம் பற்றிய தேடலும், புரிதல்களும், உரையாடல்களும், செயற்பாடுகளும் அவசியமாகின்றது'' (குகநாதன்.இ, கூத்துக் கலைஞர், நேர்காணல்). இதனை அடிப்படையாகக் கொண்டே கூத்து மீளுருவாக்கம் என்ற கருத்துருவாக்கம் முன்வைக்கப்பட்டு பங்குகொள் அரங்கச் செயற்பாடாக முன்னெடுக்கப்பட்டது.

''இந்த மீளுருவாக்கத்தில் பார்ப்போர் இருக்கின்றனர். இவர்கள் கூத்தினை வெறுமனே பார்த்துவிட்டு போகாமல் அங்கு மீளுருவாக்கம் செய்யப்பட்ட அம்சத்தினை சிந்திக்கத் தூண்டுவதுடன் கேள்விகளை கேட்கவும் மூளுருவாக்கம் வழியமைத்துக் கொடுக்கின்றது எனலாம்'' (விவேகானந்தராசா.த, கூத்துக்கலைஞர், சி.விஜேந்திரனுடனான நேர்காணல், 2012) இதனால் நீண்டதும் தொடரானதுமான செயல் மைய உரையாடல்களின் விளைவாக பாரம்பரியமான கூத்துக்கள் புதிய உள்ளடக்கங்களுடனும் இன்று பல்கலைக்கழகச் சூழலில் மீளுருவாக்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த வருடம் 2014 இறுதிவருட நாடக மாணவர்களினால் பரீட்சை நோக்கத்திற்காக கூத்துக்கள் அடுக்கப்பட்டு மீளுருவாக்கப்பட்டு சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவாகத்தில் களரி அமைக்கப்பட்டு கூத்துக்கள் ஆற்றுகை செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இங்கு கூத்துக் கலைஞர்கள் பல்கலைக்கழகம் சார்ந்தவர்களாக இருக்கும் அதே வேளை கூத்தினைப் பழக்குபவர்கள் அண்ணாவிமார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகங்களில் கூத்தினை உள்ளடக்கி பாடத்திட்டங்களை உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. கூத்தினை கிராமங்களில் எவரும் பழக்குவதும் இல்லை, பழகுவதும் இல்லை. அது தானாகவே உடம்பில் ஊறிக்கொள்கிறது(ஜய்சங்கர்.சி,கூத்து மீளுருவாக்கம், 2011). இதற்குக் காரணம் அவர்களது வாழ்வியலோடு ஒன்றிப் பிணைந்து கூத்துக்கள் காணப்பட்டமையாகும். பல்கலைக் கழகத்தில் அவ்வாறில்லை. மாணவர் படிப்பை மாத்திரம் கருத்தில் கொள்வதனால் கூத்தாட்டங்கள் பழக்கப்படுகின்றன. இங்கு பழகும்போது பல்கலைக்கழகத்தினோடு சேர்ந்த பார்ப்போரின் பங்கு காணப்படும்.

இங்கு பயிலும் முறையில் வித்தியாசங்களுமுண்டு. இச்சந்தர்ப்பங்களில் நுணுக்கங்களைக் கையாளும் திறன்களும் குறிப்பிடத்தக்கன. இங்கும் கூத்து சுருக்கப்பட்டு நிகழ்த்தப்பட்டாலும் முறைப்படியே சட்டம் கொடுத்தல், சதங்கை அணிவிழா, அரங்கேற்றம் என நீண்டு செல்வதனை காணமுடியும். கிழக்குப் பல்கலைக்கழகத்தில் பல அரங்கச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படகின்றமை குறிப்பிடத்தக்கது. மாணவர்களைக் கொண்டு கூத்துகளை செய்தல் என்பதோடு பல்கலைக்கழகத்திற்கு வெளியே மாணவர்களும் விரிவுரையாளர்களும் இணைந்து கூத்துகளைச் செய்கின்ற தன்மையுண்டு. இதனை ஊர் அண்ணாவியாரே பழக்குவார்.

குறிப்பாக மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் கிட்டத்தட்ட 5 வருடங்களாக ஆலய முன்றலில் களரி கட்டி பாரம்பரிய கூத்துக்களை ஆற்றுகை செய்ய வழிவகுத்திருந்தனர். மாலை வேளைகளில் ஏனைய கலச்சார நிகழ்வுகளையும் நடாத்துவதுடன் இரவு வேளைகளில் கூத்துகளை கிராமிய கலைஞர்களைக் கொண்டு பாரம்பரியம் சிதறாமல் பாரம்பரியத்தோடு நிகழ்த்த வழியமைக்கின்றது. கிழக்குப் பல்கலைக்கழகம் இந்நிலையில் இங்கு பல்வேறு விதமான பார்ப்போர் ஒன்றினைக்கின்றது. இங்கு பல ஊர்களில் இருந்து கோவிலுக்கு வருபவர்கள் கூத்தினை கண்டுகளிக்கின்றனர். இங்கு பார்ப்போர் கிராமிய பார்போரில் இருந்து சற்று வேறுபட்டவர்களாகவே காணப்படுவர். உதாரணமாக இங்கு காசுமாலை போடுதல் போன்ற அம்சங்கள் எல்லாம் குறைவு எனலாம்.

எனவே பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டம், பரீட்சை நோக்கம் செம்மைப்படுத்தல், மீளுருவாக்கம் பொதுவாக பழகி ஆற்றுகை செய்தல் போன்ற பல அரங்கச் செயற்பாடுகள் தற்காலத்தில் வெளிப் பார்வையாளர்களையும் கருத்திற்கொண்டு ஆற்றுகை செய்யப்படுகிறது. இதனால் பார்ப்போர் பல்கலைக்கழகம் சார்ந்தவர்காகவும், சாராதவராகவும், குறிப்பாக ஏனைய மாவட்டங்கள் சார்ந்தவர்களாகவும் காணப்படுவது சிறப்புக்குறியது. ஆகவே வெளிநாட்டவரும் பார்வையாளரக காணப்படுகின்றமை தற்காலத்தில் கூத்துக் கலைவளர்சின் வெளிப்பாடெனலாம்.

கூத்தரங்கச் செயற்பாட்டினைப்பற்றிய, ஆய்வுகளில் ஈடுபடுகின்ற ஆய்வாளர்களும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களும் ஒருவகையில் பார்ப்போராகக் காணப்படுகின்றனர். இவர்கள் பாரம்பரிய கூத்துக்களை கிராமங்களுக்குச் சென்று பார்த்தே ஆய்வுகளை மேற்கொள்வதும் குறிப்பிடத்தக்கது. இவர்கள் ஏனைய பார்ப்போரோடும் மற்றும் கலைஞர்களோடும் இணைந்து செயற்படும் போது சிறப்பாகவும், நுணுக்கமாகவும் கூத்துக்கலையைப் பார்க்கும்போது மட்டுமே சிறப்பாக தங்களது ஆய்வுகளை மேற்கொள்ள முடியும். எனவே இவர்களின் முதற்படி பார்ப்போர் என்பது குறிப்பிடத்தக்கது. சிலர அத்தோடு இவர்கள் கூத்தில் பங்குதாரர்களாகவும் மாறும் தன்மையும் காணப்படுகிறமை சிறப்பபுக்குரியதாகும்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

கிராமங்களில் ஆடப்படும் கூத்துக்களைப் பார்க்கும் பார்ப்போருக்கு இணையான இன்னொரு பக்கமாக பல்கலைக்கழகத்திலும் பார்ப்போர் காணப்படுவதனை அவதானிக்கலாம். இங்கு பலவகையான பார்ப்போர் காணப்படுவர். பல இன மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழகம் சார்ந்த ஏனையோர் பார்ப்போராகக் காணப்படுவது குறிப்பிடத்தக்கது. அது மாத்திரமின்றி பல்துறைகள் பல்கலைக்கழகத்தில் காணப்படுவதனால் அங்கு பார்ப்போரின் இரசனை வெவ்வேறு விதத்தில் காணப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. அவர்கள் கூத்தினைப் பற்றி விளங்கிக்கொள்ளும் தன்மை ஒருவருக்கொருவர் வித்தியாசப்பட வாய்ப்பும் உண்டு. இங்கு படித்தவர்களே பார்ப்போராக இருப்பதனால் கூத்தினைப் பற்றிய எண்ணக்கருக்களும் வேறுபட்டு கூத்தினை அடுத்த தளத்திற்கு இட்டுச் செல்வதனையும் அவதானிக்க முடிகின்றது.

பல்கலைக்கழகத்தில் பார்ப்போர் பலரைச் சார்ந்ததாகக் காணப்படுவதனால் கூத்தின் பரிணாமங்கள் பலவாறு பலபேரைச் சென்றடைகின்றது. பல்கலைக்கழக கூத்துக்கள் பெரும்பாலும் பார்ப்போரின் இரசனைக்கு ஏற்ப உருவாக்கப்படுவதும் குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகக் கூத்து பல்கலைக்கழக சமூகத்தினை ஒன்றிணைப்பதாகவே அமைகின்றது. மத இன வேறுபாட்டை கட்டவிழ்த்து அனைவரும் ஒன்றாகப் பார்த்து இரசிப்பது புலனாகிறது. தமிழர்களின் பாரம்பரிய கலையினை நாடளாவிய ரீதியில் கொண்டு செல்லவும் உலகெங்கும் அறியச் செய்யவும் இவ்விருவழிகளிலும் பார்ப்போரை உருவாக்குவதற்கு பல்கலைக்கழகம் ஒரு முக்கிய மையமாகக் காணப்படுகின்றது.

பல்கலைக்கழகத்தின் பார்ப்போர் பல தன்மை கொண்டவர்கள். அவர்கள் பல நோக்கங்களைக் கொண்டவர்களாகவும் காணப்படுவர். ஆங்கு ஆய்வாளர்கள் அதுபோன்று உளவியளாளர்கள் மற்றும் இவர்களில் கலையார்வம் கொண்டவர்களின் செயற்பாட்டு விருத்திக்கு கூத்தரங்கு உதவி புரிவதாக அமைகின்றது. இங்கு காணப்படும் ஆய்வாளர்கள், அறிவியளாலர்கள், மாணவர்கள் கூத்தினுடைய அம்சங்களைப் பெற்று ஏனையவற்றோடு தொடர்பாக்கி புதிய வடிவங்களை உருவாக்குவதங்கு முயற்சிப்பதும் குறிப்பிடத்தக்கது. இதற்கு இவர்கள் அனைவரும் பார்ப்போராக இருப்பதே காரணம் எனலாம். இன்று தமிழர் மத்தியில் ஒரு சிறப்பான கலைவடிவமாக கூத்து வளர்ச்சிபெற பல்கலைக்கழகம் உறுதுணைபுரிகின்றமை குறிப்பிடத்தக்கது. பல்கலைக்கழகப் பார்ப்போர் இரசனை, அழகியல், செழுமை போன்ற பலவற்றை விரும்புபவர்களாக காணப்படுவர். எனவே அவர்களின் இரசனை அழகியலுக்கேற்ப கூத்து உருவாக்கப்படுவதும் அவர்களின் அறிவியலுக்கேற்ப உருவாக்கப்படுவதும் கூத்தினை வளர்த்துச்செல்ல சாத்தியமானது எனலாம்.

பல்கலைக்கழக கூத்ததரங்கச் செயற்பாடு பல்கலைக்கழகத்தினுள்ளே மாத்திரம் அல்லாமல் வெளியிலும் செயற்படுவது குறிப்பிடத்தக்கது. இதிலும் பார்ப்போரானவர்கள் பல்கலைக்கழகத்தினுள் மாத்திரமின்றி வெளிச் சூழலிலும் பார்ப்போர் அமைகின்றமையினைக் காணலாம். ஏனெனில் அதனுடைய செயற்பாடு பல்கலைக்கழகத்தின் வெளியேயும் முன்னெடுக்கும்போது பல்கலைக்கழக கூத்தரங்கச் செயற்பாடானது பரந்துபட்டதாக அமைவதுடன் மத்தியதர வர்க்கத்தினர் கிராம மக்கள் எனப் பலர் பார்ப்போராக இணையும் சந்தர்ப்பம் காணப்படுகின்றது. இதனால் கூத்தரங்கச் செயற்பாடு பற்றி ஆய்வுகளை மேற்கொள்ளும் மாணவர்கள் பல்கலைக்கழகக் கூத்தரங்கச் சூழலில் மாத்திரமின்றி வெளியிலும் பார்ப்போராக இருந்து ஆய்வுகளை மேற்கொள்கின்றமை குறிப்பிடவேண்டிய விடயமெனலாம்.

**பாடசாலை கூத்தரங்கச் செயற்பாடுகளில் பார்ப்போர்.**

கிராமங்களில் பாரம்பரியமாக சமூகத்துடன் உறவாடும் கூத்து இன்று இன்னுமொரு கட்டமாக பாடசாலைகளில் கூத்தரங்கச் செயற்பாடுகள் மூலம் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளைப் பொறுத்தவரையில் பாடத்திட்டத்தில் கூத்து உள்ளடக்கப்பட்டுள்ளமை முக்கியம்சமாகும். அதனால் பாடசாலைகளில் கூத்தினை அறிதல், பழகுதல் போன்ற பல அம்சங்கள் முன்னெடுக்கப்படுகின்றன. அதுமாத்திரமின்றி ஆய்வுகளுக்காக சிறுவர்களைப் பயன்படுத்தி கூத்தரங்கச் செயற்பாட்டினை மேற்கொள்வது குறிப்பிடத்தக்கது.

பாடசாலைகளில் பரீட்சையினை நோக்கமாகக்கொண்டு கூத்துக்களைப் பழகுதல், பார்த்தல், அதன் அம்சங்களை அறிதல் போன்றன முக்கியம் பெறுகின்றன. அதுமாத்திரமின்றி பாடசாலைகளில் இடம்பெறும் போட்டி வலயம், மாகாணம், என்பவற்றினைக் குறியாக வைத்து கூத்துக்களைப் பழகுதல் குறிப்பிடத்தக்கது. தமிழ்த்தினப்போட்டி இதில் குறிப்பிடத்தக்கதாகக் காணப்படுகின்றது.

பரீட்சை எனும்போது செய்முறைப்பரீட்சை காரணமாக மாணவர்கள் அதில் பங்குகொள்வதற்காக கூத்தரங்கச் செயற்பாட்டினை அறிதல் முக்கியம் பெறுகின்றது. இங்கு பாடசாலை மட்டத்தில் பார்ப்போர் காணப்படுகின்றனர். இவர்கள் மாணவர்களாக, ஆசிரியர்களாக பெற்றோர்களாக, நடுவர்களாக அமைவது குறிப்பிடத்தக்கதாகும். இந்த பார்ப்போர் கோட்டம், வலயம், மாகாணம் எனச் செல்லும்போது விரிவடைந்து செல்வதனைக்காண முடியும்.

பாடசாலைகளில் சமகாலத்தில் சமகாலப் பிரச்சினைகளை மையப்படுத்தி கூத்துக்கள் எழுதப்பட்டு ஆற்றுகை செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது. இவை போட்டி நோக்கமாகவே செய்யப்படுகின்ற போதிலும் கூத்தின் பரிணாமத்தை அடுத்த தளத்திற்கு நகர்த்திச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இன்றைய நிலையில் சிறுவர் அரங்கு பற்றி சிந்திக்கத்தொடங்கியுள்ளனர். ''சிறுவர்களுக்கு கூத்தரங்கில் இடமுண்டு என்பதற்கு கட்டியக்காரன் பாத்திரம் சான்று பகர்கின்றது''(கதிர்கமநாதன், அண்ணாவியார், நேர்காணல்). பாடசாலை மாணவர்கள் மட்டுமல்லாது இங்கு பெரியோரும் முக்கியம் பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை அரங்கச் செயற்பாட்டில் கூத்துக்களைப் பழக்குதல், பயிற்சிப் பட்டறைகள் மேற்கொள்ளுதல், மாணவர்கள் அண்ணாவிமார்களிடம் பழகுதல் போன்ற பல விடையங்கள் சமகாலத்தில் முன்னெடுக்கப்படுகின்றன. இது எமது பாரம்பரியம் பற்றி அனைவரும் தெளிவு பெற வேண்டும் என்பதனை நோக்கமாக்கொண்டிருக்கலாம் என சிந்திக்கத் தோன்றுகின்றது.

பாரம்பரிய கலைவடிவமான கூத்தினுடைய தேவைப்பாடுகள் இன்றைய நிலையில் கட்டாயமாகவுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்களுக்குப் பயிற்சி, குரல்வளம், சுறுசுறுப்பு போன்ற பல அம்சங்களை கூத்தின்மூலம் பெற்றுக்கொள்ள முடியும். கூத்தானது கற்பனையினை வளர்ப்பதுடன் மனனம் பண்ணுதல் போன்ற விடயங்களில் மாணவர்களுக்கு உதவி புரிகின்றது எனக்கூறலாம்.

பார்ப்போர் பாடசாலைக் கூத்தரங்கிலும் முக்கியம் பெற்று விளங்குவதுடன் இவர்கள் மாணவர்களாக இருப்பது மட்டுமின்றி ஆசிரியர்களாகவும் காணப்படுகின்றனர். பாடசாலையில் கூத்தினுடைய அம்சங்களை வைத்து பல்வேறுபட்ட சமூகப் பிரச்சினைகளை மையமாகக்கொண்ட கூத்துக்கள் உருவாக்கப்படுகின்றன. பாடசாலை கூத்தரங்கச் செயற்பாட்டில் பார்ப்போர்கள் கிராமிய கூத்தரங்கு பார்ப்போரில் இருந்து மாறுபட்டவர்களாக விளங்குகின்றனர். ஏனெனில் பாடசாலை மட்டங்களில் செய்யப்படுகின்ற கூத்துக்களானது போட்டியை அல்லது பரீட்சையை அல்லது அறிந்து கொள்ளுதலை மையமாகக்கொண்டது. இதனால் இங்கிருக்கின்ற பார்வையாளர்கள் கூத்தின் ஈடாட்டத்தோடு உடனே இணைந்துகொள்ள முடியாதவர்களாக காணப்படுகின்றமையை அவதானிக்க முடிகிறது.

''பார்ப்போர் பாடசாலைகளில் அறிந்த விடயங்களையோ அல்லது அறிவுறுத்தப்பட்ட விடயங்களையோ கட்டுக்கோப்புக்குள் நின்று பார்ப்பர'' (மோகனதாசன்.க, கூத்தின் மீளுருவாக்கம்,விமோசனா 2007). பாடசாலை கூத்தரங்கச் செயற்பாட்டில் பார்ப்போர்கள் கூத்தினைப்பற்றி அறிந்தவர்கள், அறியாதவர்கள், கல்விமான்கள், மாணவர்கள், ஏனைய சக சமூகத்தினர், இனத்தவர்கள், ஏனைய மதத்தவர்கள் பார்ப்போராக அமைகின்றமையும் குறிப்பிடத்தக்க விடயமாகும். இவர்களுடைய இரசனை உணர்வானது கிராமிய பார்போரிலிருந்து வேறுபடுகிறது. இங்கு அவர்களின் ஆளுமைக்கும், அறிவிற்கும் ஏற்ப கூத்தினுடைய அம்சங்களையும் கருவையும் விளங்கிக் கொள்வர். பாடசாலை கூத்தரங்கச் செயற்பாட்டில் பார்ப்போர் இணைகின்றனர். பரீட்சை, போட்டி, பாடத்திட்டம் போன்ற பலற்றினை மையமாகக்கொண்டு கூத்தரங்கச் செயற்பாடுகள். பாடசாலைகளில் இடம்பெறும். இங்கு பார்ப்போர் அரங்கு பேன்ற விடயங்களும் உள்ளடக்கப்படுகின்றது.

பாடசாலை கூத்தரங்கச் செயற்பாட்டில் பார்ப்போரின் ஊடாட்டமானது அதாவது உறவானது கிராம கூத்தரங்கச் செயற்பாடுகள் போல் அமையும் என்ற சாத்தியப்பாடு குறைவாகவே காணப்படுகின்றது. ஏனெனில் இதனுடைய நோக்கம் பரீட்சை, போட்டி என்பவற்றை உள்ளடக்குவதால் பார்ப்போரும் அதிலிருந்து விலகிக்கொள்ள முடியாதவர்களாகக் காணப்படுகின்றமையை உணரலாம். கிராமிய சூழலில் அவர்கள் கோயிற் சடங்குகளில் நிகழ்த்தப்படும் ஆற்றுகையால் சமூகமே கூத்தினை நிகழ்த்துவதுடன் அவர்களே பார்ப்போராகவும் அமைகின்றனர். இதனால் பார்ப்போராக இருக்கும் இவர்களின் ஈடாட்டமானது மிகவும் நெருங்கியதாகவும், கூத்தோடு ஒன்றித்ததாகவும் காணப்படுகின்றது. இந்த உறவு பாடசாலை கூத்தரங்கச் செயற்பாட்டில் காணப்படுவது மிகக்குறைவு.

பாடசாலைகளால் சுருக்கப்பட்ட கூத்தினையோ அல்லது கூத்தின் அம்சங்களையோ மாணவர்கள், ஆசிரியர்கள் அறிந்தும் புரிந்தும் தெரிந்தும் கொள்கின்றனர். இதனால் ஒருவகைப் பார்ப்போரையும் உள்வாங்குகின்றனர். அது மாத்திரமின்றி கூத்தினையோ அல்லது கூத்தின் அம்சங்களையோ குறிப்பிட்ட பகுதியினையே விஸ்தரிக்கின்ற தன்மையும் பாடசாலையூடாக வெளியிலும் கொண்டு செல்வதனால் பலவித பார்ப்போரை கூத்து தன்னகத்தே கொள்ளும் தன்மையையும் கொண்டுள்ளது எனலாம்.



© 2024, IRJTSR 

**முடிவுரை**

ஆற்றுகைக் கலைகளைப் பொறுத்தவரையில் பார்ப்போரின் வகிபங்கு மிகவும் முக்கியம் பெறுகின்றது. பார்போரினாலேயே அந்த கலைவடிவம் உயிர்த்துடிப்புப் பெறுகிறது. அந்த வகையில் இன்றைய நிலையில் பார்வையாளர்கள் பலவகைப் பட்டவர்களாகவே காணப்படுகின்றனர். கிராமங்களை மையமாகக் கொண்ட பார்ப்போரிலிருந்து சற்று மாறுபட்டவர்களாக பார்ப்போர் காணப்படுகின்றனர். கல்வி சார் நிறுவனங்களில் ஏனைய மத இன நாடுகளைச் சேர்ந்தவர்களையும் பார்ப்போராக கூத்து உள்வாங்கியிருக்கின்றமையை ஆய்வின் மூலம் அறிய முடிகின்றது. கிராமிய கூத்தரங்கில் பார்வையாளர்கள் இரசனை மற்றும் பொழுது போக்கினை மட்டும் நோக்கமாக் கொண்டவர்களாகவும், கல்வி சார் நிறுவனங்களில் பார்ப்போர் அறிவைப் பெருக்குதல், போட்டிகளில் பங்குகொள்ளல், பரீட்சை, ஆய்வு செய்தல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு செயற்படுவதனையும் அவதானிக்க முடிகின்றது.

எந்தவொரு ஆற்றுகைக் கலைகளையும் அடுத்த பரிணாமத்திற்கு இட்டுச்செல்வது பார்வையாளர்களே. பார்ப்போரினாலே ஆற்றுகை வெற்றி தீர்மானிக்கப்படுவதனை அறிய முடிகின்றது. அந்த வகையில் பல பார்வையாளரிடம் முதன்முதலாக கூத்தினை கொண்டு செல்ல ஈடுபட்டவர் பேராசிரியர் வித்தியானந்தன்.சு. இவரது செயற்பாடுகள் கூத்தரங்கை மாத்திரமின்றி பார்வையாளர்களிடமும் தாக்கம் செலுத்தியது. பார்வையாளர்களை கூத்தின்பாற் கவனம் செலுத்த வைத்தமையினையும் அறிந்துகொள்ள முடிகின்றது.

கல்வி சார் நிறுவனங்களான பாடசாலை, பல்கலைக்கழகங்களில் பார்ப்போர் பலரைச் சார்ந்ததாகக் காணப்படுவதனால் கூத்தின் பரிணாமங்கள் பலவாறு விருத்தியடைந்து செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. பாரம்பரிய கலையினை நாடளாவிய, உலகலாவிய ரீதியில் கொண்டு சென்று அங்கும் பார்ப்போரை உருவாக்குவதில் கல்விசார் நிறுவனங்களின் பங்களிப்பானது இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுவதனை அறிந்துகொள்ள முடிகின்றது. அது மாத்திரமின்றி கல்விசார் நிறுவனங்களில் காணப்படுகின்ற மாணவர், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் கூத்தினுடைய அம்சங்களைப்பெற்று ஏனையவற்றோடு தொடர்பாக்கி புதிய வடிவங்களை உருவாக்க முயற்சிப்பதனையும் அறிய முடிகின்றது. அந்த வகையில் கல்விசார் நிறுவனங்களின் பார்ப்போரால் கூத்தரங்கச் செயற்பாடானது பரந்துபட்டதாக அமைவதோடு கிராமிய பார்போரையும் மத்தியதர வர்க்கப் பார்ப்போரையும் ஒன்றாக இணைத்து செயற்பட வைப்பதற்கு இந்நிறுவனங்கள் உதவி செய்கின்றமையினையும் அவதானிக்க முடிகின்றது.

கிராமிய பார்போரில் பெரும்பாண்மையானவர்களாக ஆண்களே காணப்பட்டனர். பெண்களின் பங்களிப்பு ஆற்றுகையில் மிகக்குறைவாகவே காணப்பட்டது. கல்வி சார் நிறுனங்களினால் ஆற்றுகை செய்யப்படும் கூத்துக்களில் நேரச் சுருக்கம் மற்றும் பெண்களின் பாத்திரங்களை பெண்கள் ஏற்று ஆற்றுகை செய்வதனால் பார்ப்போரின் தளத்தில் மாற்றம் ஏற்படுவதுடன் பெண் பார்வையாளர்களையும் அதிகளவில் உள்வாங்குவதற்கு கல்வி சார் நிறுவனங்களின் பங்கு இன்றியமையாதனவாக உள்ளமையினையும் அறிய முடிகின்றது.

**சான்றாதாரங்கள்**

[1] மௌனகுரு.சி, பழையதும் புதியதும், குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2015.

[2] நூலக நிறுவனம், 9ஆவது ஆண்டு விழா மலர், இலங்கை, 2013.

[3] குகநாதன்.இ, கூத்துக் கலைஞர், நேர்காணல், வயது 27, முனைக்காடு.

[4] மோகனதாசன்.க, கூத்தின் மீளுருவாக்கம்,விமோசனா, மட்டக்களப்பு, 2007.

[5] மௌனகுரு.சி, ஈழத்து தமிழ் நாடக அரங்கு, குமரன் புத்தகஇல்லம், கொழும்பு, 2008.

[6] மௌனகுரு.சி மட்டக்களப்பு மரபுவழி நாடகம் குமரன் புத்தக இல்லம், கொழும்பு. 2014.

[7] விவேகானந்தராசா.த, கூத்துக்கலைஞர், சி.விஜேந்திரனுடனான நேர்காணல்,மூன்றாம்கண் உள்ளூர் அறிவுத்திறன் செயற்பாட்டுக்குழு, மட்டக்களப்பு,2012.

[8] ஜெய்சங்கர்.சி,கூத்து மீளுருவாக்கம், கருத்து – பட்டறை, மிதே' வளாகம், மதுரை,2011.

[9] கதிர்கமநாதன், அண்ணாவியார், நேர்காணல் கொக்கட்டிச்சோலை.